ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1991 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு 1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய, ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

5. சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி.

(ஆ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன் வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம்திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.